# மெய்ப்பொருள் உணர்வும் மனிதமேம்பாடும்



சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
94449 58526. Email:- thiruppalli@yahoo.com
www.pambanswamigal.org or pambanswamigal.net

மரம், செடி, கொடி அசைவால் காற்றும், புகையால் தீயும், நறுமணத்தால் மலரும் உண்டு என அறிதல் போல உலக இயக்கத்தால் கடவுள் உண்டு என்பதை உணர்தல் வேண்டும். கடவுள் இல்லை என்று கூறுவோர், ஞாயிற்றுக்கு ஒளி இல்லை என்று கூறும் குருடர்கட்கு ஒப்பாவார்.

மெய்பொருள் உணர்வு இல்லாதவர்கட்கு, ஐம்புலனடக்கம் பெற்றுத் தன்வயப்பட்டு நின்றபோதும், வீட்டு நெறி கிட்டாதாதலின், பயன் இல்லாமல் போகும். இதனை தெய்வப்புலவர் திருவள்ளுவர் தன்னுடைய 354 வது குறளில்
“ஐயுணர்வு வுய்தியக் கண்ணும் பயம் இன்றே
மெய்யுணர்வு இல்லதவர்க்கு” என்றும்

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிய சதாசிவக்கண்ணியில்
“ஐந்தும் அறிந்திடினும் ஐந்தும் அடங்கிடினும்
சிந்தை நிற்கல் அன்றோ திட்டம் சதாசிவமே” என்று கூறுகின்றார். மற்றும் சுவாமிகள் ஞானவாக்கியம் – 50ல் “சேய் பெண்டு சுற்றம் மாய்கின்ற மட்டும்” இதன் உட்பொருள் மக்கள், மனைவி, சுற்றம் என்பவை ஒருவர் இறக்கும்வரையே இருக்கும். இவ்வுடலை விடுத்து உயிரை இயமன் கொண்டு செல்லும் போது அவர்களால் உதவ இயலாது. அவ்வமயம் உதவுபவன் இறைவனே. உறவினர்கள் சந்தைக் கூட்டம் போன்றவர்கள். ஒரு கிராமத்தில் வாரத்திற்கு ஒரு முறை சந்தை நடைபெறும். அன்று மட்டும் மக்கள் வருவார்கள் மற்ற நாட்களில் அந்த இடத்தில் மக்கள் பயன்பாடு இருக்காது. அதுபோல் தான் இந்த உறவினர்களும்; உண்மையான உறவு இறைவன் ஒருவனே. சுவாமிகள் மிகத் தெளிவாக சதாசிவக்கண்ணியில் கூறும்போது “பொய்வீடு கட்டி அதில் பொய்வாழ்க்கை உற்றேன் உன் மெய்வீட்டு வாழ்க்கை இனி வேண்டும் சதாசிவமே” என்றபடி மெய்ப்பொருளை உணர்ந்து வழிபட்டு வாழ்தலே உய்யும் நெறியாகும். சுவாமிகள் முருகனிடம் வேண்டும் போது “கேடுறும் அஃறிணை உயிராக என்னைப் பிறப்பிக்காமல் மனித உருவமாகப் பிறப்பித்த உன் அருள் தன்மையை நான் மறக்க மாட்டேன்” போன்ற கருத்துக்கள் எல்லாம் மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

மனிதப் பிறவியின் நோக்கமே மனம், வாக்கு, காயத்தால் சிவபெருமானை வழிபடுவதே. விண்ணுலகிலுள்ள தேவர்கள்கூட இப்பூவுலகிற்கு வந்தே அரனை அர்ச்சித்து வழிபடுகின்றனர். ஆனால் “ஊனுடம்பு எடுத்து உழலும் ஊமரான மனிதர்கள் இறைவழிபாடு செய்யாது காலத்தை வீணாகக் கழிக்கின்றனரே, அந்தோ பரிதாபம்”! என்று இறைவழிபாடு செய்யாத மனிடர்களை பார்த்து திருநாவுக்கரசர் நம் உடலுறுப்புக்கள் ஒவ்வொன்றையும் இறைவனை வழிபடப் பயன்படுத்த வேண்டும் என்று திரு அங்கமாலை என்று ஒரு தனிப்பதிகமே பாடியுள்ளார்.

தெய்வப்புலவர் வள்ளுவர் “கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை” என்றும்

மாணிக்கவாசகர் “வணங்கத் தலை வைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன்சீரடியார் கூட்டமும் வைத்த எம்பெருமான்”
என்று வருணிக்கின்ற விதம் எடுத்து சொல்ல வார்த்தைகள் ஏதுமில்லை. பெற்றகரிய இந்த மனிதப்பிறவியை

pdfMachine
A pdf writer that produces quality PDF files with ease!
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click “print”, select the “Broadgun pdfMachine printer” and that’s it! Get yours now!

இந்த கட்டுரையில் இருந்து நாம் தெரிந்துக் கொள்ள வேண்டிய செய்தி என்னவென்றால்

““கோடி தீர்த்தம் கலந்து குறித்தவை
ஆடினாலும் அரனுக்கு அன்பில்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே

அதாவது ஓட்டைக்குடத்தில் வைத்த நீர் பயன்படாது வீணாவதுபோல, அரனடிக்கு அன்பில்லாமல் புண்ணிய நதிகளில் நீராடினால் பயன் இல்லை என்கின்றார் நாவுக்கரசர். ஆகையால் நாம் இந்த உடல் மூலம் மற்றவர்களுக்கு பயன்படும் விதத்தில் தம்மை பயன்படுத்திக்கொண்டால் பிறவி என்னும் இப்பெருங்கடலை கடப்பது மிகவும் எளிது என்பது இந்த அடியேனின் எண்ணமாகும்.

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click “print”, select the “Broadgun pdfMachine printer” and that’s it! Get yours now!